From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 14/2012

Deposition of witness for: PW - 17

| | | | |
|---|---|---|---|
| Name | : ராமகிருஷ்ணன் | Father/Husband Name | : பாலுச்சாமி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 05.03.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 05 day of 02.2025.

**( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ). .**

நான் தற்சமயம் காவல் துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து ஒய்வு பெற்று மதுரையில் குடியிருந்து வருகிறேன். கடந்த **25.06.2011** ம் தேதி நான் கொட்டாம்பட்டி காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது கொட்டாம்பட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திருமதி. மாரிஸ்வரி என்பவர் **25.06.2011** ம் தேதி மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையிலிருந்து கிடைக்கபெற்ற தகவலை பெற்று அங்கு சென்று சிகிச்சையிலிருந்த சேக் முகமது என்பவரிடம் புகார் பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண் **152/11** இதச பிரிவுகள் **147, 148, 294(b). 323, 324, 427 (NP)** மற்றும் தமிழ்நாடு பெண்களை துண்புறுத்தலை தடுக்கும் சட்டம் பிரிவு **4** ன்கீழ் முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்து ஆரம்ப கட்ட புலன்விசாரணை எனக்கு முன்பிருந்த அதிகாரி செய்து வைத்திருந்ததை எனது தொடர் விசாரணைக்கு எடுத்துகொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகளை விசாரித்தபோது எனக்கு முன்பு விசாரித்த அதிகாரியிடம் சொன்னதுபோலவே என்னிடமும் கூறியதால் அவர்களிடம் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்பு **26.08.2011** அன்று சம்பவ இடத்தை புகைப்படம் எடுத்த புகைப்பட கலைஞரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த புகைப்படத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன், **( அந்த புகைப்படம் மற்றும் குறுந்தகடு அசாஆ 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).** அசாஆ **14** புகைப்படம் என்பதால்

எதிரிகள்தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கில் காயம்பட்ட அலியார் மகன் ராஜாமுகமது என்பவருக்கு சிகிச்சை அளித்த மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை மருத்துவர் திரு. திருமலை என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். அதேபோல் இவ்வழக்கில் காயம்பட்ட சேக்முகமது, ஷாஜகான், சேட்டு, யாஸ்மின்பீவி, ராஜாமுகமது, ரகுமத்நிஷா, மதினாபேகம், சேக்முகமது ஆயியோர்களை சிசிச்சை அளித்த நாராயணன் என்பவரை விசாரித்து காயச்சான்றுகள் பெற்றேன். சேட்டு, யாஸ்மின்பீவி, ராஜாமுகமது, ரகுமத்நிஷா, மதினாபேகம், சேக்முகமது ஆகியோர்களது காயச்சான்றுகள் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுவிட்டதால் தற்போது **சேக்முகமது, ஷாஜகான், ஆகியேரர்கள் காயச்சான்று முறையே அசாஆ 15, அசாஆ16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இத்துடன் வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் **147, 148, 294(b). 323, 324, 32,6, 427, 506(2)**ன்கீழும் தமிழ் நாடு பெண்களை துண்புறுத்தலை தடுக்கும் சட்டம் பிரிவு **4**ன்கீழும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**1, 3, 7 எதிரிகள் ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை, மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**

**எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை:**

அசாஆ**14** புகைப்படம் எடுத்தாக சொல்லப்படும் நபர் எந்த ஊரைசார்ந்தவர் என்றால் மேலூர் மீனாட்சி காம்ப்ளக்ஸ் கடை நடத்தி வந்தார். மேற்படி புகைப்படம் எடுத்தாக சொல்லப்படும் செல்வராஜ் என்பவர் இந்த வழக்கில் ஆஜராகி சம்பவ இடம்சென்று புகைப்படம் எடுக்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளதால் அசா**1** எடுத்துகொடுத்த புகைப்படத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துவிட்டு செல்வராஜ் எடுத்தாக செரல்கிறேன் என்றால் சரியல்ல. வண்டி சேதாரத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜரில் வாகனம் சேதமடைந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், அவ்வாறு சேதம் அடையாததால் தான் அதில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அரசு தரப்பில் கூறுவதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் மருத்துவரை விசாரித்து காயச்சான்று பெற்றதாக சொல்வதால் அதை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். காயம்பட்ட நபர்கள் தங்களுக்கு குச்சியாலும், அருவாளளும் காயம்

ஏற்பட்டதாக சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லியுள்ளார்கள். சாட்சிகளின் போலீஸ் வாக்குமூலத்தை நான் பார்த்தேன் என்றால் சரிதான், காயம்பட்ட சாட்சிகள் அனைவரும் உருட்டுகட்டை, கம்பி, கத்தி போன்ற ஆயுதங்களால் தாக்கப்பட்டதாக எனது புலன்விசாரணையில் தெரியவந்ததா என்றால் இல்லை. அசா1 வீட்டருகே சம்பவம் நடந்ததாக சொல்வதால் அங்கு நான் சென்றேனா என்றால் சென்றேன், அந்த சம்பவம் சமயத்தில் அசா1ன் வீட்டிற்கு மேற்கே 15 அடி அகலத்தில் 100 நீளத்தில் பாதை செல்கிறதா என்றால் எனக்கு ஞாபகம்இல்லை. அந்த 15 அடி அகலத்தில்தான் 4 அடி அகலத்தை ஆக்கிரமிப்பு செய்து சேக்முகமது வீடு கட்டிக்கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. அந்த ஆக்கிரமிப்பினால் பொதுமக்கள் நடந்து போக முடியாது சூழல் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு ஆக்கிரமித்ததால்தான் சேக்முகமது அசா1னிடம் நியாயம் கேட்டபோது ஒருவருக்கு ஒருவர் வாக்குவாதம் முற்றி 60 பேர் சேர்ந்து அசா1யை துரத்தி சென்றபோதுதான் காயம்பட்ட அனைவரும் தவறி விழுந்து மருத்துவமனையில் காயத்திற்கு சிகிச்சை பெற்றார்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும், அசா1 வசதி படைத்த நபர் என்பதால் அவரது செல்வாக்கை பயன்படுத்தி எதிரிகளுக்கு எதிராக பொய்யான வழக்கு தொடுத்து நான் பொய்யான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல